
## திராவிடத்தால் வாழ்கிறோம்

791

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## பெரியாரும் தமிழரும்!




'தந்தை பெரியார் தமிழர் விரோதி, தமிழுக்கு எதிரி, திருக்குறளுக்கு எதிரி' என்றெல்லாம் திட்டமிட்டு, சிலரால் அவதூறு பரப்பப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில், பெரியார் தமிழுக்கு என்ன செய்தார், தமிழருக்கு என்ன செய்தார், அவர் இல்லாவிட்டால் உலகெங்கும் திருக்குறள் சென்று அடைந்திருக்குமா என்றெல்லாம் பதில் சொல்லும் வகையில், எண்ணற்ற கருத்தரங்குகள், பொதுக்கூட்டங்கள், தெருமுனைப் பிரச்சாரங்கள் கடந்த சில மாதங்களாகத் தமிழ்நாடெங்கும் நடந்த வண்ணம் உள்ளன.

அந்த வகையில், 07.02.2025 அன்று சென்னை கவிக்கோ அரங்கில் 'தமிழ்க்கேள்வி' செந்தில்வேல் ஒருங்கிணைப்பில் 'என்றென்றும் பெரியார்' என்ற தலைப்பில், கருத்தரங்கம் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கில் ஆன்மிகவாதி சக்திவேல் முருகனார், சட்டமன்ற உறுப்பினர் ஆளூர் ஷாநவாஸ், பத்திரிகையாளர் ப.திருமாவேலன், வழக்கறிஞர் மதிவதனி ஆகியோர் உரையாற்றியிருந்தனர். இதில் திருமாவேலன் ஆற்றிய உரை 'பெரியாரும் தமிழரும்' என்ற தலைப்பில், சிறு வெளியீடாக தந்தை பெரியார் திராவிடர் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

சாதி இழிவு நீங்கவும், ஆண், பெண் பேதம் நீங்கவும், தமிழர்கள் அனைவரும் மொழியால், இனத்தால், நாட்டால் ஒருவரே என்ற நிலையை உருவாக்கவும் உயிருள்ளவரை உழைத்த பெரியாரை, எதிர்த்தவர்கள் வீழ்ந்தார்களே தவிர, அவர் வீழவில்லை. அவரை வீழ்த்த நினைத்தவர்கள் தூக்கி வீசப்பட்டதே தமிழ்நாட்டின் வரலாறு என்று ஆணித்தரமாக நிறுவுகிறது இந்நூல்.

வாங்கிப் படியுங்கள், மற்றவர்களுக்கும் பகிருங்கள்...

நூலின் விலை: ரூ.10

தொடர்புக்கு, அலைபேசி : 94438-22256, 97883-24474

## ஃப்ளாஷ்பேக்





சித.இராஜேந்திரன்

### தலைவரைச் சந்தித்த தருணம்!

2016-ஆம் ஆண்டு மார்ச் மாதம் சென்னை, கோபாலபுரம் இல்லம் சென்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன். என்னுடன் புதுக்கோட்டை மாவட்டம், பொன்பேத்தி முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர் இரா.துரைமாணிக்கம் அவர்கள் வந்திருந்தார். தலைவரைச் சந்தித்த தருணத்தில் தேர்தல் நிதியாக ரூ.1,000 வழங்கி வாழ்த்துப் பெற்றேன். அப்போது, அவருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது, இத்தருணத்தை எண்ணியெண்ணி மகிழாத நாளில்லை.

**– சித.இராஜேந்திரன், மீனவர் அணி துணை அமைப்பாளர், புதுக்கோட்டை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### இடைவிடாத பணிகள்!

1949-ஆம் ஆண்டு, கழகம் தொடங்கப்பட்டு, அதனைக் கால்கோள் செய்வதற்கு அண்ணா மிகக் கடுமையாகப் பணியாற்றினார். 1949-ஆம் ஆண்டு முதல் 1952-ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு முழுவதும் கட்சிக் கிளைகள் அமைக்கும் பணி, கழகக்கூட்டங்கள், பொதுக்குழு, செயற்குழு, நாடகங்கள், திரைப்பட நுழைவு, எழுத்துப்பணி, சுற்றுப்பயணம், வாசிப்பு என இடைவிடாத பணிகள் அவர் முன்னே இருந்தன. ஒரு கட்டத்தில் உடல்நலம் பாதிக்கப்பட்டு, இரண்டு மாதங்கள் வரை கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை.

## இது பெரியார் மண்

**ர.பிரகாசு**

3

**பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.**

# 'முன்' மாதிரிமங்கலம்!

ஆரிய ஆதிக்கத்தின் மீது, திராவிட இயக்கம் ஒரு நூற்றாண்டாக நிகழ்த்தி வரும் சம்மட்டி அடியால், முந்நூறு ஜாதிகள் சமூக தளத்தில் மூன்று பிரிவுகளாகச் சுருங்கிவிட்டன. உயர் ஜாதி, இடைநிலை ஜாதி, தாழ்த்தப்பட்ட ஜாதி என்ற 3 பிரிவுகள் மட்டுமே மெல்லியதான கோடுகளுடன் மிச்சமிருக்கின்றன. சுயமரியாதைத் திருமணங்கள், சமத்துவபுரங்கள், தீண்டாமையைக் கடைப்பிடிக்காத கிராமங்களுக்குப் பரிசு போன்ற திட்டங்களின் ஊடாக இந்த 3 கோடுகளையும் கரையச் செய்கிற பணியை 'திராவிட மாடல்' அரசு செய்துகொண்டிருக்கிறது.

ஆனால், ஓர் அரசு மட்டுமே செய்துவிடக் கூடிய பணி அல்ல இது. சமூகமும் சேர்ந்து எடுக்க வேண்டிய தீர்க்கமான முடிவு அது. அந்த முடிவுக்கு ஆகச்சிறந்த முன் உதாரணம்தான் மாதிரிமங்கலம்.

மயிலாடுதுறைக்கு அருகே உள்ள அரங்கங்குடியைச் சேர்ந்த துரைசாமி, நீதிக்கட்சிக் கொள்கையின்பால் ஈர்க்கப் பட்டவர். பார்ப்பனிய அதிகார வர்க்கத்துடன் மோதல், தலித் மக்களின் உரிமைகளுக்கான போராட்டம் என்று சிறுவயது முதலே ஜாதி ஒழிப்புக் களத்தில் உறுதியோடு நின்றவர். அவரைக் காவல்துறையில் சேர்த்துவிட்டால், இதையெல்லாம் விட்டுவிட்டு, மற்றவர்களைப் போல் சராசரியான மனிதனாகி விடுவார் என்று அவரது தந்தை நாராயணசாமி முயற்சி எடுத்து அவரைக் காவலராக்கினார்.

1950-களில் காவல்துறையில் கோலோச்சிய பார்ப்பனர்களை எதிர்த்து, கலகக்குரல் எழுப்பி, பணியை விட்டார். அதன்பின்னர், கதிராமங்கலத்திற்குக் குடிபெயர, அங்கும் அக்ரஹார அடக்குமுறைகளுக்கு எதிராக வெகுண்டெழுந்தார். பின்னர், 1955-இல் மாதிரிமங்கலத்தில் மளிகைக் கடை வைத்தார். அத்துடன் மாதிரிமங்கலம் ஊராட்சியின் திராவிடர் கழகத் தலைவராகவும் ஆகிவிட்டார்.





● துரைசாமி

அப்போது தேநீர்க் கடையில் தாழ்த்தப்பட்டோருக்கு அமர இடம் இருக்காது, தேங்காய்ச் சிரட்டையில் தேநீர் கொடுக்கும் வழக்கம் இருந்தது. துரைசாமி பேசிப்பார்த்தார், பலன் இல்லை. அருகே புதிய கடையைத் திறந்தார், பணியாளர்கள் யாரும் வரவில்லை. கேரளாவில் இருந்து அழைத்துவந்தார். 'இங்கு அனைவரும் சமமாக அமர்ந்து தேநீர் குடிக்கலாம்' என அறிவிப்பு செய்தார். முதன்முதலாக மக்கள் சமமாக அமர்ந்து தேநீர் குடித்தனர்.

மாதிரிமங்கலத்தில் இருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கோனேரிராஜபுரத்தில் ஆதிரத்தினேஸ்வரர் கோயில் எதிரே குளம் ஒன்று உள்ளது. அக்ரஹாரவாசிகளைத் தாண்டி வேறு யாரும் குளத்தைப் பயன்படுத்தக் கூடாது என்பது எழுதப்படாத விதி. அந்தத் தீண்டாமையை ஒழிக்க, ஊரெங்கும் பிரச்சாரம் செய்தார், பெரியாரை அழைத்துப் பொதுக் கூட்டம் நடத்தினார்.

ஆனால், காவல்துறைப் பாதுகாப்போடு மேலாதிக்கத்தைத் தக்கவைக்க முயன்றது எதிர்த்தரப்பு. இரவோடு இரவாக குளத்தில் பால்டாயில் ஊற்றினார் துரைசாமி. மீன்கள் செத்து மிதந்தன. குளத்தைத் தூர்வார பார்ப்பனர்கள் ஆட்களை அழைத்தனர். யாரும் குளத்தில் இறங்கக்கூடாது என ஏற்கெனவே எச்சரித்து வைத்திருந்தார் துரைசாமி. வெளியூரில் இருந்து ஆட்கள் அழைத்து வரப்பட்டால், மீன்களுக்குப் பதிலாக மனிதர்கள் மிதப்பார்கள் என்றும் மிரட்டி வைத்திருந்தார்.

ஆட்சியர், பொதுமக்கள், திராவிடர் கழகத்தினர் முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடத்தினர். குளத்தில் குளிக்கவும், தண்ணீர் எடுக்கவும் எல்லோரையும் அனுமதித்தால், தூர்வாரும் பணியில் ஈடுபவார்கள் என்று உறுதியாகச் சொன்னார். அப்போதும் பார்ப்பனர்கள் அமைதி காக்க, அனைவரும் குளத்தைப் பயன்படுத்தலாம், யாரேனும் தடுத்தால் சட்ட நடவடிக்கை பாயும் என்று எச்சரித்து, தீண்டாமைக் கொடுமையை முடிவுக்குக் கொண்டுவந்தார் ஆட்சியர்.

மாதிரிமங்கலம் முன்மாதிரிமங்கலமாக வரலாற்றில் பதிந்தது எப்படி? வரும் வாரம் வாசிப்போம்...

**...பயணிப்போம்.**

## பொய்ப்பெட்டி

**கோவி.லெனின்**

54

**"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."**

# ஜனநாயகம் காக்கும் பணியில் கழகம்!

***தமிழ்நாட்டுக்குத் துரோகம் செய்யும் மாநிலங்களின் தலைவர்களை அழைத்து தி.மு.க. அரசு, கூட்டம் நடத்தியிருப்பதாக பா.ஜ.க. குற்றம் சாட்டுகிறதே?***

தமிழ்நாட்டுக்குத் தொடர்ந்து துரோகம் செய்து வருகிற ஒரே கட்சி, ஒன்றியத்தில் ஆட்சியில் உள்ள பா.ஜ.க.தான். தமிழ்நாட்டைப் போலவே இந்தியாவில் உள்ள மாநிலங்களின் உரிமைகளைப் பறிக்கிற வகையில், ஒவ்வொரு செயல்பாடாக மேற்கொண்டிருக்கும் பா.ஜ.க. அரசின் மற்றொரு துரோகம்தான், மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்பு. இதனால், தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களும், ஒடிசா, மேற்குவங்காளம், பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களும் பாதிக்கப் படும் என்பதாலும், எதிர்காலத்தில் குறிப்பிட்ட சில மாநிலங்களில் மட்டுமே வெற்றிபெற்று, இந்தியாவில் ஆட்சியை அமைத்துவிட முடியும் என்ற நிலை உருவாகும்போது, மற்ற மாநிலங்கள் அதிகார ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் தங்களுடைய உரிமைகளை இழந்துவிடும் என்பதால்தான், இந்தியாவின் ஜனநாயகக் காவலராக தமிழ்நாட்டின் முதலமைச்சர் கூட்டுநடவடிக்கைக் குழுக் கூட்டத்தைக் கூட்டினார். 4 மாநில முதலமைச்சர்கள், 2 துணை முதலமைச்சர்கள், முன்னாள் முதலமைச்சர், முதன்மையான அரசியல் தலைவர்கள் ஆகியோர் ஜனநாயகத்தின் பிரதிநிதிகளாக மாநில உரிமைகளின் முழக்கமாக இந்தக் கூட்டத்தில் பங்கேற்று, தமிழ்நாடு முதலமைச்சர் முன்னெடுக்கும் நடவடிக்கை களுக்குத் துணை நிற்போம் என்ற உறுதியையும் அளித்துள்ளனர்.



தொகுதி மறுசீரமைப்பினால், மக்கள்தொகைக் கட்டுப்பாட்டை மிகச் சிறப்பாகக் கடைப்பிடித்த தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களின் தற்போதைய நாடாளுமன்றத் தொகுதி களின் விகிதாச்சாரம் துளியளவும் குறையக்கூடாது என்பதுதான், கூட்டு நடவடிக்கைக் குழுவின் முதன்மைக் கோரிக்கையாகும். இதற்கான உத்தர வாதத்தை வழங்காத ஒன்றிய பா.ஜ.க. அரசுதான், தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களுக்குத் துரோகம் இழைத்து வருகிறது. காவிரி விவகாரத்தில் கர்நாடகாவுடனும், முல்லை பெரியாறு அணை விவகாரத்தில் கேரளாவுடனும் தமிழ்நாட்டுக்கு இருந்து வரும் பிரச்சினைகள் இன்று நேற்றல்ல, பல ஆண்டுகளாக நீடிக்கிறது. அண்டை மாநிலங்களின் எல்லைப்புறச் சிக்கல்கள் என்பது, தமிழ்நாட்டுக்கு மட்டும் உரியதல்ல. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கும் உண்டு. அதற்காக பொதுப் பிரச்சினையில் ஒதுக்கிவைப்பது ஜனநாயகக் கடமையிலிருந்து விலகுவதாகும்.

> **"ஒன்றிய பா.ஜ.க. அரசுதான், தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களுக்குத் துரோகம் இழைத்து வருகிறது."**

கர்நாடகாவில் காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டப்படுவது பற்றி அந்த மாநில பா.ஜ.க.வின் நிலைப்பாட்டை, தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர்கள் வெளிப்படையாகச் சொல்வார்களா? கேரள பா.ஜ.க., முல்லைப்பெரியாறு அணை விவகாரத்தில் என்ன நிலைப்பாடு கொண்டுள்ளது? அந்தந்த மாநிலத்தில் பா.ஜ.க. கொண்டுள்ள நிலைப் பாட்டின்படி, பா.ஜ.க.வும் தமிழ்நாட்டுக்குத் துரோகம்தான் செய்கிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசு ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது.

**...வினா தொடரும்.**

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131